IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.72/2018

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | SATHISHKUMAR |
| FATHER'S NAME | : | ARUMUGAM |
| VILLAGE | : | KONDASAMUTHIRAM |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2th day of June 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கொண்டசமுத்திரம் பகுதியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 புகார்தாரரை எனக்கு தெரியாது. இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 06.05.2011 அன்று மோனிகாவிற்கும், பாபு என்பவருக்கும் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு பிறகு மோனிகாவிற்கும், அவரது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், கடந்த 04.03.2012 அன்று மோனிகாவிற்கு பெண் குழந்தை பிறந்தது என்றும் குழந்தை பிறந்தததை பார்க்க வராமல் அவருடைய கணவர் 17.03.2012 அன்று வீட்டிற்கு வந்து வாழும்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மோனிகாவிற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் தற்போது வர இயலாது என்று பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் பின்னர் மோனிகாவின் அம்மாவை அவரை அழைத்துகொபண்டு அவரது கணவரின் வீட்டிற்கு சென்றபோது அவர் 2வது திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவது தெரியவந்ததாகவும் என்னவென்று கேட்டதற்கு மோனிகாவின் மாமியார் அவரை அடித்ததாகவும் மோனிகாவின் கணவர் அவரை கட்டையால் அடித்தாகவும் பாபுவின் 2வது மனைவி குழந்தையை கழுத்தை நெநித்து கொல்ல முயன்றதாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பி குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**